1982 மார்ச் 15]

தயாராயிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் 1979-ல் இதை வலியுறுத்தி எழுதியிருக்கிறோம். மீண்டும் வேண்டுமானால் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டேயிருக்கலாம்.

திரு. ஏ. சி. சண்முகம் : திண்டுக்கல்—பெரியகுளம் ரெயில்வே பாதை முக்கியமானதொரு திட்டம் என்று சொன்னாலும் கூட தமிழ் நாட்டில் எல்லோரையும் பாதிக்கும்படியான ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. ஊட்டி ரெயில்வே பாதையை நிரந்தரமாக மத்திய அரசு நிறுத்தியிருப்பதாக பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் எடுத்து நடத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு 1979–1981 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகள்

* வினா எண். 660 : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருக்கு 1979–80, 1980–81 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட புதிய பஸ்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1979–80, 1980–81-ஆம் ஆண்டுகளில் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகளின் விவரம் பின்வருமாறு :—

1—4—1979	முதல்	31—3—1980	வரை	115
1—4—1980	முதல்	31—3—1981	வரை	196

திரு. எஸ். என். இராமசாமி : பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு எவ்வளவு புதிய வழித்தடங்கள் போடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : புதிய பேருந்துகள் பற்றித்தான் கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் எவ்வளவு புதிய வழித்தடங்கள் என்பதற்கு இப்போது என்னிடம் கணக்கு இல்லை. 1980-ல் வாங்கப்பட்ட பேருந்துகளில் ஏறத்தாழ 102 பேருந்துகள் புதிய வழித்தடங்களுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது 1981-ல் வழங்கப்பட்டதில் 109 புதிய வழித்தடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறன்ன.